# December 7, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. விமானங்களுக்கான பயணக் கட்டணத்துக்கு மத்திய அரசு உச்சவரம்பு நிர்ணயித்தது. நாட்டின் பல்வேறு நகரங்களில் கடந்த 5 நாள்களாக இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்படுவதால், பிற நிறுவனங்கள் விமானக் கட்டணத்தை பல மடங்கு உயர்த்தின. இதைத் தடுக்கும் நோக்கில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.
   i. கடந்த வியாழக்கிழமை 550 விமானங்கள், வெள்ளிக்கிழமை 1,000-க்கும் மேற்பட்ட இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்ட நிலையில், ஐந்தாவது நாளாக சனிக்கிழமை நாட்டின் முக்கிய நக ரங்களில் இருந்து இயக்கப்படும் 1600-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.
   ii. விமானிகளின் பணிச் சுமையைக் குறைக்க, கடந்த நவம்பர் 1- ஆம் தேதிமுதல் விமானிகளுக்கான திருத்தப்பட்ட பணிநேரக் கட்டுப்பாட்டு விதிகள் (எஃப்டிஎல்) அமலுக்கு வந்தன. இந்த விதிகளின்படி, வாராந்திர ஓய்வையும் வருடாந்திர விடுமுறைகளையும் தனித்தனியாகக் கருத வேண்டும். அதாவது, வாராந்திர 48 மணி நேர ஓய்வுக்குப் பதிலாக விடுமுறையை ஈடு செய்யக் கூடாது.
   iii. இந்த விதிமுறை மாற்றங்களுக்கு இண்டிகோ போதிய திட்டமிடாததால், அந்த நிறுவனத்தில் விமானிகள் பற்றாக்குறை ஏற்பட்டு, கடந்த சில நாள்களாக அன்றாட விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.
   iv. இண்டிகோ தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) பீட்டர் எல்பர்ஸுக்கு விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அந்த நோட்டீஸில், நம்பகமான விமான சேவைக்கு உரிய நேரத்தில் ஏற்பாடுகளை செய்வதிலும், பயணிகளுக்குத் தேவையான வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதிலும் பீட்டர் கடமை தவறிவிட்டதாக தெரிவித்துள்ளது. இதுகுறித்து அவர் 24 மணி நேரத்தில் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் டிஜிசிஏ கோரியுள்ளது.
2. இந்தியா-அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தை இறுதி செய்வது தொடர்பான மூன்று நாள் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக அமெரிக்க குழு வரும் 10-ஆம் தேதி இந்தியா வர உள்ளது.
   i. அமெரிக்க வர்த்தத் துறையின் துணைப் பிரதிநிதிரிக் ஷ்விட்ஜெர் தலைமையிலான குழு வரும் 10-ஆம் தேதி இந்தியா வர உள்ளது. இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரி விகிதத்தைக் குறைப்பது, விரிவான வர்த்தக ஒப்பந்தம் என்ற இரண்டு முக்கிய அம்சங்களின் கீழ் இரு நாடுகளும் இந்த வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு வருகின்றன.
   ii. இந்த இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இதுவரை 6 சுற்று பேச்சுவார்த்தைகள் நிறைவுற்றுள்ளன. இரு நாடுகளிடையே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ரூ.17,18,207 கோடி (191 பில்லியன் டாலர்) மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் ரூ.44,97,925 கோடி (500 பில்லியன் டாலர்) மதிப்புக்கு உயர்த்துவதை இந்த இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இலக்காக கொண்டுள்ளது.
3. மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 'தமிழ்நாடு வளர்கிறது' என்ற தலைப்பில் ஞாயிற்றுக்கிழமை (டிச. 7) நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.36,660.35 கோடிக்கான 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாக உள்ளன.
4. தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட கீழ்கண்ட 7 புதிய தொழில்நுட்பங்களை ராணுவ பயன்பாட்டுக்கு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) ஒப்படைத்துள்ளது.

i. தொழில்நுட்ப நிதி திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வான்வழி தற்பாதுட்ப மேம்பாட்டு காப்பு ஜாமர்களுக்கான உயர்மின் விநியோக தொழில்நுட்பம்,
ii. கடற்படை ரோந்து கப்பல்களுக்கான கடல் அலையை செல்லும் எதிர்கொண்டு தொழில்நுட்பம்,
iii. மேம்பட்ட மிகக் குறைந்த அதிர்வெண் மற்றும் உயர் அதிர்வெண் மாறுதல் தொழில்நுட்பம்,
iv. நீருக்கடியில் இருக்கும் கப்பல் தளங்களுக்கான விஎல்எஃப் ஏரியல்,
v. எதிரி கப்பல்களை வேகமாக இடைமறிக்க உதவும் உந்துவிசை தொழில்நுட்பம்,
vi. பயன்படுத்தப்பட்ட லித்தியம் பேட்டரிகளிலிருந்து லித்தியம் மூலப்பொருள்களை பிரித்தெடுப்பதற்கான தொழில் நுட்பம்,
vii. நீருக்கடியில் நீடித்த கண்காணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் நீண்ட நேரம் உழைக்கும் பாட்டரி தொழில் நுட்பம்.

விரிவான சோதனைக்குப் பிறகு இந்த தொழில்நுட்பங்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

5. காஞ்சிபுரத்தில் ரூ.324 கோடியில் 770 படுக்கைகளுடன் அமைக்கப்பட்டு வரும் இந்தியாவின் மிகப்பெரிய புற்றுநோய் மருத்துவமனை விரைவில் திறக்கப்பட உள்ளது என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.
   I. இந்தியாவின் மிகப்பெரிய புற்றுநோய் ஆராய்ச்சி மையம் என்று சொல்லப்படும் மும்பை டாடா மெமோரியல் கேன்சர் ரிசர்ச் இன்ஸ் டிடியூட்டில் 670 படுக்கை வசதிகள் உள்ளன. 770 படுக்கை வசதிகளுடன் இந்தியாவிலேயே தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தில்தான் அண் ணாவின் பெயரால் மிகப்பெரிய புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்கப்படுகிறது. இதை முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் திறந்து வைக்கிறார் என்றார்.
6. சட்டமேதை பி.ஆர்.அம்பேத்கரின் 69-ஆவது நினைவு தினத்தையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் அவரது சிலைக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவரும் மாநிலங்களவைத் தலைவருமான சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் நரேந்திர மோடி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் சனிக்கிழமை மலரஞ்சலி செலுத்தினர்.
   i. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தலைமைச் சிற்பி எனப் போற்றப்படும் பி.ஆர்.அம்பேத்கர், சுதந்திர இந்தியாவின் முதல் சட்டத் துறை அமைச்சர் என்ற பெருமைக் குரியவர். கடந்த 1956, டிச.6-இல் மறைந்த இவருக்கு கடந்த 1990-இல் நாட்டின் உயரிய பாரதரத்னா விருது (மறைவுக்கு பிந்தைய கௌரவம்) வழங்கப்பட்டது. அம்பேத்கரின் நினைவு தினம், 'மகாபரி நிர்வாண் திவஸ்' எனும் பெயரில் கடைப்பிடிக்கப்படுகிறது.
7. ஷேக் முகமது பின் அப்துல் ரகுமான் - கத்தார் பிரதமர்